4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 189/2015 நாள்: 17.03.2026 வா.சா.1 – கோபாலகிருஷ்ணன்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாத்தவர் நாயக்கர் யார் என்றே எனக்கு தெரியாது. அவர் 150 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று சாட்சி தற்போது கூறுகிறார். அவர் ஏதாவது பத்திரம் எழுதியுள்ளாரா என்று எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை, ஆனால் உயில் இருந்திருக்கிறது. மேற்படி நபர் எழுதிய ஆவணம் உயில் ஆவணமா, தான பத்திரமா என்றால் சாட்சி உயில் ஆவணமாக தான் இருக்கும் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி நபர் எழுதிய உயில் ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தாத்தவ நாயக்கர் தாவா சொத்தை மாரிமுத்து என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மடத்தை யார் கட்டினார்கள் என்றால் மாரிமுத்து தலைமையில் பெரியவர்கள் எல்லாம் சேர்ந்து கட்டியுள்ளார்கள் என்று சாட்சி கூறுகிறார். அது என் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லமுடியாது என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.17 16:52:46 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.